**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 13.02.2018–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு அவசரக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : **13.02.2018** இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்</u>

( 1 ) நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளின் எல்லைகளை தமிழ்நாடு மறு வரையறை ஆணையத்திலிருந்து பெறப்பட்ட கடிதம் ந.க.எண். 3174/2017/ தே.பொ1 நாள் 23.09.2017 உடன் இணைத்து வரப்பெற்ற Tamil Nadu Local Bodies Delimitation Regulations 2017–இல் தெரிவித்துள்ள விதிமுறைகளின்படியும், தமிழ்நாடு மறு வரையறை ஆணைய சுற்றறிக்கை D-11/2017 மற்றும் ந.க.எண். 3174/2017/ தே.பொ1 நாள் 19.10.2017 மற்றும் 13.12.2017 ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள வழிமுறைகளின்படியும் எல்லைகள் மறு வரையறை செய்யப்பட்டு இந்நகர் மன்ற தீர்மானம் எண். 224 நாள் 15.12.2017–இல் ஒப்புதல் பெறப்பட்டது. மேற்படி, வார்டு மறு வரையறை வரைவு பிரேரணையை மாவட்ட மறு வரையறை அதிகாரி / மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் அவர்களின் வழியாக துறைத் தலைவர் அவர்களின் ஒப்புதலுடன் தமிழ்நாடு மறு வரையறை ஆணையத்தின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதன் பேரில் உறுப்பினர் – செயலர், தமிழ்நாடு மறு வரையறை ஆணையம் அவர்களின் சுற்றறிக்கை D-14/2017 மற்றும் ந.க.எண். 3174/2017/ தே.பொ1–2 நாள் 27.12.2017 கடிதத்தில் ஆணையத்தால் சரிபார்க்கப்பட்ட வரைவு மறு வரையறை கருத்துருக்களை / வரைபடங்களை வெளியீடு செய்யுமாறு தெரிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து கருத்துருக்கள் / வரைபடங்கள் வெளியிடப்பட்டதில் அரசியல் கட்சி மற்றும் பொது மக்களிடத்திலிருந்து 32 எண்ணிக்கை ஆட்சேபனை வரப்பெற்றது. அதனை தொடர்ந்து 10.02.2018 அன்று தமிழ்நாடு மறு வரையறை ஆணையத்தால் நடத்தப்பட்ட மண்டல அளவிலான ஆய்வுக் கூட்டத்தில் தெரிவித்த அறிவுரைகளின்படி பெறப்பட்ட 32 மனுவின்மீது ஆய்வு செய்து உரிய திருத்தம் செய்யப்பட்டது. இறுதி வார்டு மறு வரையறை முன்மொழிவு தயார் செய்து மாவட்ட மறு வரையறை அதிகாரி / மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் அவர்களின் வழியாக துறைத் தலைவர் அவர்களின் ஒப்புதலுடன் தமிழ்நாடு மறு வரையறை ஆணையத்தின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்க மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் பார்வையிட்டு ஒப்புதல் அளிக்கலாம்.

(2651/17/அ2)

**தீர்மானம் எண். 237**

அனுமதிக்கப்பட்டது

ஒம் /– ப. கிருஷ்ணமூர்த்தி
தனி அலுவலர்

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி